190

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

190/54

கிளை-6 தருதலம், மாம்பாக்கம்; செய. புரட்டாசி. ஆ 24—9—54 தளிர்-49

## குருகுலத்தார் தொண்டும்--வழிபாடும்

[சென்னைப் புரசவாக்கத்தில் 18-9-54-ல், குருகுலத்தார் வழிபாடும் தொண்டும் நடைபெற்றன. புரசை வீதிகளில் தொண்டர்கள் வீதிவலமும், அப்பேட்டையில் கங்காதரேசுரர் திருக்கோயிலில் வழிபாடு முதலியனவும் நடைபெற்றன. திருப்புகழ்மணி திரு. T. M கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தலைமையேற்று உடனிருந்து நல்லுரை வழங்கி நடத்துவித்தார்கள். திருக்கோயில் அறங்காவலரும் சிறந்த எழுத்தாளரும்; கம்பர் கழகச் செயலாளருமாகிய திரு. க. சோமசுந்தரம் அவர்கள், மிக்க ஊக்கமெடுத்து வரவேற்றுச் சிறப்பித்தார்கள் சென்னை நகராண் கழகத் துணை ஆணையாளர் திரு. சங்கரன் முதலிய பெருமக்கள் உடன் ஊர்வலத்திலும் வழிபாடு முதலியவற்றிலும் ஆர்வமாய்க் கலந்து கொண்டு இனிது நடப்பித்து மாண்பு செய்வித்தனர். மக்கள், ஆடவரும் மாதருமாகத் திரளாகக் கூடி ஈடுபட்டனர்.]

திரு. க சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரை:

'அதர்மம் மிகுகின்ற நாட்களில் நான் தோன்றுவேன்' என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறார். இப்போது ஆசிரியர், திருக் கூட்டத்துடன் வருகை புரிந்திருக்கிறார்கள். பேட்டையின் சார்பாக அவர்களையும், இறைவன் திருப்புகழிலேயே திளைத்து மக்களை நன்னெறிப்படுத்தி வரும் திருப்புகழ்மணி அவர்களையும் வரவேற்கிறேன்.

திருப்புகழ்மணி அவர்கள் நல்லுரை:

"குழந்தைகளுக்குக்கூட விளங்கும்படி அவ்வுலகம் இவ்வுலகம் என்பதைப் பற்றி அழகனார் விளக்கினார்.

பக்தியின்றி வழிபாடு இல்லை. வழிபாடு பெரியோர் மரபு! முன்னெல்லாம் திருஞானசம்பந்தர் போன்றவர்கள் அடியார் கூட்டத்துடன் நாட்டில் அங்கங்கும் சென்று வந்தார்கள். இப்போது நால்வர் மாதிரி, கூட்டத்துடன் சென்று தொண்டு புரிவதை அழகனார் தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டுள்ளார். இவ்வளவு தொண்டர்களைப் பார்க்கின்ற போது தெய்வத்தைப் பார்த்தமாதிரி இருக்கிறது. திருக்குறளில், மனிதர் நலத்துக்கு வேண்டுவது அத்தனையும் திருவள்ளுவர் தெரிவித்திருக்கிறார்.

வழிபாடு செய்துகொண்டிருந்தால், நாட்டின் பொருளாதாரம் எப்படி என்கிறார்கள். முயற்சியோடு சீராய்ப் பொருள் வகையில் ஈடுபட்டு, வழிபாடும் கொண்டிருக்கிறபோது பணம் மிகுதியாகத்தான் கிடைக்கின்றது.

நமது வாழ்நாள் சிறிது அன்பாயிருந்து ஆயுளைப் பயன்படுத்தவே அவகாசமில்லாமல் இருக்கிறது. வேறு நினைப்பு எதற்கு? அன்பில் நிறைந்தவர் ஒருவர் இருந்தாலும், அவர் இருக்கும் ஊர் அல்ல, நாடுமுழுதும், உலகு முழுதும்நலம் உண்டு.

எல்லாரும் இளவழகனார் செல்லுமிட மெல்லாம் திரண்டு செல்லவேண்டும்; விடாமல் வாரந்தோறும் செல்ல வேண்டும்."

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளிநாடு | ரூ. | 6 0 0 |
| தனித்தாள் | | 0 1 0 |
| ஆயுள்— | | |
| கையொப்பம் | ரூ. | 100 0 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | சேய, புரட்டாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 24-9-54 வெள்ளி. | 49 |


# நாகரிகமும் முன்னேற்றமும்

யாரோ ஓர் அன்பர் எழுப்பக் கண் விழித்தோம். பொழுது இன்னும் நன்றாகப் புலரவில்லை. உணர்வு வந்தபோது யாத்திரைக் குழுவுடன் திருவிடைமருதூர்க் கோயிலில் படுத்திருந்தது தெரியவந்தது.

தலையணையாக வைத்திருந்த பையைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு காலைக் கடனை எண்ணி அரசலாற்றங்கரையை நோக்கி நடந்தோம்.

அரசலாறு காவிரியின் ஒரு முக்கிய கிளை நதி; திருவிடைமருதூர் அதன் தெற்குக் கரையில்தான் இருக்கின்றது. அதற்குச் சிறிது வடக்கிலேயே காவிரியும் பாய்கிறது. ஆற்றோரத்தில் அமைந்த இத் திருவிடைமருதூர் அழகுடன் விளங்கியது என்று இயம்பவும் வேண்டுமோ!

'வைகறையில் துயி'லெழும் பழக்கம் பொதுவாக எமக்கில்லை; சென்னை நகரின் உயர்ந்த மாளிகைகளையும் தாண்டிக் கதிரவன் தன் கதிர்களைப் பரப்பும்போதுதான் எமக்கு 'வைகறை'.

ஆகவே, காலைக் கடனை முடித்த அரசலாற்றங்கரையில் நின்றபோதுதான் அதன் அனுபவம் தெரியவந்தது.

அருணோதய நேரம்; இன்னும் கதிரவன் தன் கிரணங்களைப் பரப்பவில்லை மென்காற்று பரிச இன்பத்தைத் தந்துகொண்டிருக்கின்றது. ஆற்றின் இருமருங்கிலும் பெருவாரியாகக் கதலித் தோட்டங்கள். அவற்றோடு இனம் தெரிந்தும் தெரியாததுமான நானாவிதத் தாவரங்கள்! ஆற்றிலே சில நாட்களுக்கு முன்புதான் வெள்ளம் சென்ற அறிகுறிகள்; இப்பக்கமும் அப்பக்கமும் எங்கோ சென்றுகொண்டிருந்த சிறு புள்ளினங்கள்; உள்ளூர்ப் பெண்டிரும் ஆடவரும் ஆற்றை நோக்கி வந்துகொண்டிருக்கும் நடை; தொலைவில் மகாலிங்கர் ஆலய கோபுர உச்சியில் அமைக்கப் பெற்றிருக்கும் ஒலி பரப்புக் கருவி, திரு. தண்டபாணி தேசிகர் பாடிய தேவார இசைத் தட்டுகளை ஒலித்துக்கொண்டிருந்த ஒலி. இவையனைத்தும் செவியையும், கண்ணையும், உடலையும், மனத்தையும் எங்கோ மிதக்கச் செய்தன.

அலுவல் நிலையில் எத்தனையோ இரவுகள் கண்ணயராது கழித்ததுண்டு; அப்போதெல்லாமும் இந்த வைகறையையும் அருணோதயங்களையும் கண்டதுண்டு ஆயினும் இன்றைய நிலையோ முற்றிலும் மாறானது!

அலுவல் காரணமாகக் கண் விழிக்கும்போதெல்லாம் அமையும் மன நிலை வேறு; அதைப் பேய்த் தன்மைக்குத்தான் ஒப்பிட வேண்டும்! பற்பல பொறுப்புகளால் அழுத்தப் பெற்று அதி விழிப்புடன் ஒழிவற்று அலைந்துகொண்டிருக்கும் நிலை, அது கூளிகளுக்கும் கோட்டான் போன்ற இழிந்த பறவை, விலங்கினங்களுக்கும், நஞ்சு கொண்டு காந்து உழலும் ஊர்வனவற்றிற்கும் உரிய உகந்த காலமல்லவோ! மக்களியல்புக்குப் பொருந்தாக் கால மல்லவே! எனவே மனிதப் பண்புக்குரிய மனநிலையினின்று வழுக்க அக்காலமும் நிலையும் துணை நிற்கின்றன மேற்சொன்ன அஞ்சத்தக்க உயிர் வர்க்கங்கள் உலவித் தொழிற்படும் நோக்கில் யாமும், தொழிற்படப் புகின் அவற்றின் இயல்புகளால் தாக்கப்படுதலில் புதுமையேதுமில்லை அவற்றின் நிலைக்குப் பெரிதும் ஈர்க்கப்படாதிருக்க யாம் மேற்கொள்ளும் முயற்சியும் விழிப்பும் உன்னித் தெளியப்பட வேண்டியவை!

இந் நிலையில் அப்போதெல்லாம் வைகறையும் அருணோதயமும் யாதொரு புதுமையும் கற்பிக்கவில்லை. இன்றைய நிலையோ முற்றிலும் மாறுபட்டது!

கட்புலன் என்றும் போல் பார்க்கவில்லை! செவிப் புலன் என்றும்போல் செவி மடுக்கவில்லை; மனம் பெரிதும் வேறுபட்டிருந்தது!

மனத்துக்கும் வேறுபட்ட ஓர் உணர்வு, இன்று கண்ணுடனும் செவியுடனும் கலந்திருந்தது. இதுகாறும் பார்த்தும் கேட்டும் வந்தவை, உடலின் பார்வையும் கேள்வியுமாகும்! இன்று உணர்வின் காட்சி, கேள்வி ஆகும்! என்னே! நம் முன்னே, நம்மைப் போன்று கண், செவி புலன் பெற்ற ஏனைய மிருகங்களினின்றும் மாறுபட்ட உணர்வுள்ள ஒன்று உள்ளது உண்மையாகவே தெளியப்படுகின்றது!

பொதுவாக, மிருகங்களும் நாமும் நம்மைச் சுற்றியுள்ளவற்றிற்கும் உடலுக்கும் பொறிகளுக்கும் கட்டுப் பட்டு வாழ்கின்றோம். இவ்விரு இனங்களுக்கும் முகத்தில் கண்கள், அவற்றால் பார்க்கும் பார்வையும் ஏறக்குறைய ஒரு தன்மையதே.

இப்பொதுப் பார்வையிலிருந்து நாம் முன்னேற்றம் கொள்ள வேண்டும். கண்ணும் அறிவும் ஒருங்கு சேர்ந்து பார்க்கவேண்டும். இதோடு நில்லாமல், கண்ணும் மனமும் கடந்து அவ்வுறுப்புக்களின் ஆட்சியினின்றும் விடுபட்ட பார்வைக்கு உயரவேண்டும். அக்காட்சி நிலையில் சற்றுக் கண்மூடிச் சிந்தித்தால், நாம் இவ்வுடலாலும், புலன்களாலும் கட்டுண்ட அற்ப மக்களாகவா தோற்றுகின்றது! எத்தனை எத்தனை அற்ப நினைவுகள் நம்மினின்றும் அகன்று போகின்றன! அந்நிலைக்கு எதை ஒப்பிடுவது!

அப்போது நமக்கிருக்கும் கண்கள் யாவரும் கண்டறியாதவை! காதுகள் யாரும் கேட்டறியாதவை! அவை பார்ப்பவையும் கேட்பவையும் வேறு!

மாந்தர் முகங்களில் அவை உண்மைப் பொருள்களைக் காணும்! அருணோதயத்தில், இயற்கைத் தாவரத்தில் இன்பத்தைக் காணும்! புள்ளினங்களின் குரலில் இன்னிசையைப் பருகும்!

மக்கள் குரலில் மென்மையை மடுக்கும்! இசையின் கம்பீரத்தைத் தெளியும்! ஞானிகளின் உரையில் ஆழ்ந்த பொருள்களை உன்னும்.

எங்கும் உண்மை! எங்கும் எளிமை! எங்கும் இனிமை! இத்தோடு நம் ஆன்ம முன்னேற்றத்தின் பாதையையும் தெள்ளத் தெளியக் காணும்!

—பா. வரதராசன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரின்பமாகிய பயிரினை விளைவித்துப் பயன் கொண்டு நிரம்பத் துய்த்து மகிழ்கின்றனர்! இங்ஙனம், "அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத் தொண்ட உழவர் ஆரத் தந்தை" அண்டத்தரும் பெறல் மேகம் போன்ற சிவபெருமான் நீடினிது வாழ்வானாக! என்பது மேலெடுத்துக் காட்டப் பெற்ற திருவாசகத் திருவண்டப் பகுதி (66–95) வரிகளின் திரண்ட பொருளாகும் இதன்கண், இறைவனை "மேகம்" என்று உருவகம் செய்யத் தலைப்பட்ட கருத்திற்கு ஏற்ற பெற்றியெல்லாம் இனிதமைய அம் மேகத்தோடு தொடர்புடைய ஏனைக் கடல் மலை மின்னல் இடி அரவு கோடை மழை தோன்றிப் பூ தம்பலப் பூச்சி காந்தள் மலர் வெள்ளம் சுழிகரை மரம் கானல் நீர் மான்கூட்டம் குளம் வயல் உழவர் விதை பயிர் என்னும் பலவற்றையும் ஒரு தொடர்பட வரிசையாக்கி, அவையவற்றிற்குத் தக்கப்படி உருவகம் செய்து, இறைவனது திருவருட் சிறப்பினை விளக்கியுள்ள திறம், அறிஞர் அனைவருக்கும் கழிபெருஞ் சுவை பயக்கும் இலக்கிய நலம் செறிந்த தொன்றாகும்.

திருவாசத்தின் இலக்கியத் திறன்:

திருவாசகத்தின் இன்னோரனைய இலக்கிய நலச் செறிவுகள் மிகப் பலவாகும். அவைகளை யெல்லாம் நாம் கருதி ஆராய்துணர்ந்தால், தோல்காப்பியர் இலக்கணநூல் இயற்றுந் திறனிலும், திருவள்ளுவர் நீதிநூல் வகுக்கும் மாட்சிமையிலும், இளங்கோவடிகள் நாடகக் காப்பியம் யாக்கும் நலத்திலும், மெய்கண்டான் முப்பொருளியல்புகளை அறிவுக்கும் மேன்மையிலும், சேக்கிழார் வரலாற்று நூல் எழுதும் வாய்மையிலும் தனித்தனியே பெருஞ் சிறப்புப் பெற்றவராதல் போல, மாணிக்கவாசகப் பெருமான் இறைபருளனுபவ இன்பநலங்களை யெல்லாம் இலக்கிய நலஞ்சொரியக் குறையற விளக்குந்துறையில் தந்நிகரற்ற தனிப் பெருஞ் சான்றோராவர் என்பதனை நன்கினிதுணர்ந்து மகிழ்ந்து நலம்பெறும் வாய்ப்புடையவராவோம்! திருவாசகத்தின் இலக்கியத்திறன் குறித்துச் சுருங்கக் கூறி விளங்க வைக்க, இதனினும் வேறு பிறிது கூறற் பாலது யாதுளது?

திருக்குறள் போல் நீதிநூல்,
சிவஞான போதம் போல்
பெறுக்க மிகும் மெய்ப்பொருள் நூல்
பீடுயர் தோல்காப்பியம் போல்
திருத்தமிகும் இலக்கண நூல்,
செய்ய திருவாசகம் போல்
உருக்கமிகும் இலக்கியநூல்
உலகினில் வேறெங்கு மில்லை.

# திருவாசகத்தின் இலக்கியத் திறன்

புலவர். முருகவேள். B. O. L.)

## இலக்கியப் பண்பு:

திருவாசகத்தின் இலக்கியத் திறன் பற்றி ஆராய்வதற்கு முன்னர், நாம் இலக்கியம் என்பது பற்றிச் சிறிதளவேனும் தெரிந்து கொள்ள வேண்டுதல் இன்றியமையாததாகும். சிறந்ததொரு பேரிலக்கியமானது தான் கூறும் பொருளாலும், அதனைக் கூறும் முறையாலும் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லதாக இருக்கும். இலக்கியம் என்பது தன்னை இயற்றிய ஆசிரியனது வாழ்க்கையடைவுகளினின்று அரும்பி, அவன் தனது வாழ்க்கையிற் கண்டறிந்த உண்மைகளையும், அவனது வாழ்க்கை அமைப்புகளையும், வாழ்க்கையானது எவ்வாறு அமைதல் வேண்டும் என அவன் விரும்பிய வகைகளையும் அது குறித்து முயன்ற அவன்றன் செயற்றிறங்களையும், அவனது வாழ்க்கையின் வெற்றி தோல்விகளையும் பளிங்கென விளங்கக் காட்டி, அவ்வாற்றால் ஏனையோர் தம் வாழ்க்கை நலத்திற்கு வழி வகுக்க வல்லதாக மாட்சியுற்று வடங்கும்.

கவிஞன் தன் உள்ளத்துணர்ச்சிகளை வெளியிட வேண்டும் எனக் கொள்ளும் விருப்பம், மக்களிடத்தும் அவர்தம் செயல்களின் மாட்டும் கவிஞனுக்குள்ள ஈடுபாடு, இப்பருப் பொருள் உலகத்தின் உண்மைத் தன்மையிலும்—இல்லதேனும் இருப்பது போலக் கருதிக் கொள்ளும் கற்பனையுலகத் தோற்றத்திலும் அவனுக்குள்ள பேரார்வம், அழகும் இன்பமும் அமையக் கருத்துக்களை வெளியிடத் துடிக்கும் ஒருவகை வேட்கை என்னும் இவற்றின் அடிப்படையாகவே பேரிலக்கியங்கள் எழுகின்றன. இங்ஙனம் தோன்றும் பேரிலக்கியங்களின் பொருட்கூறுகள், தனிமனிதனின் அகப்புற வாழ்க்கையின் பிழிவான அனுபவங்களையோ, வாழ்க்கையில் மக்கள் எல்லோருக்கும் பொதுவான 'பிறப்பிறப்பு நல்வினை தீவினை இன்பதுன்பம் இம்மை மறுமை இறைவன் ஊழ் என்பனபோலும் செய்திகளையோ, இயற்கைப் புறவுலகத்துக்கும் மாந்தர்க்கும் உள்ள தொடர்புகளையோ குறித்தனவாக இருக்கும். அன்றியும் செம்புற்றீயல் போலத் தோன்றி ஒரு பகல் வாழ்க்கையவாய் உலவி, விரைவில் அழிந்தொழிந்து மறைந்து போகும் எண்ணற்ற சிறுசிறு சுவடிகளைப் போலல்லாமல், "இலங்கு நூல்" எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவதற்கேற்ப், என்றென்றும் அழியாது நின்று நிலவி மக்களாற் பெரிதும் போற்றப் பெறும் சிறப்புடையனவாக விளங்கி நிற்றல், இலக்கியங்களுக்கு இன்றியமையாத பெரும் பண்பாகும்.

இத்தகைய இலக்கியப் பண்புகள் யாவும், திருவாசகத்தின்கண் பெரிதும் பொருந்திப் பொலிந்து சிறந்து விளங்குதலை யாவரும் காணலாம். தான் கூறும் பொருளாலும், அதனைக் கூறும் முறைகளாலும் திருவாசகம் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லதாகத் திகழ்கின்றது. தன்னை இயற்றிய ஆசிரியனது பலதிற வாழ்க்கையனுபவங்களையும், அது நலமுற விளக்குகின்றது. மனிதராயினர் அனைவரும் பொதுவாக அறிய விரும்பும் பிறப்பிறப்பு நல்வினை தீவினை இம்மை மறுமை இறைவன் ஊழ் துறக்க நிரயம் என்பவைகளைப் பற்றி, அஃது ஆங்காங்கே குறிப்பிட்டு இனிதெடுத்துப் பேசுகின்றது. என்றென்றும் நிலைபேறுற்று நின்று நிலவி, மக்களாற் பெரிதும் போற்றப்பெறும் சிறப்புடைய தெய்விக புனிதமறை நூலாகவும், திருவாசகம் சிறந்தொளிர்கின்றது!

## இலக்கிய எழிற்றிறங்கள்:

இம்மட்டோ! இலக்கியங்களுக்குப் புகழும், பெருமையும், அவையிற்றை இயற்றும் ஆசிரியர்களின் அறிவாற்றல் நுண்மாண் நுழைபுல நலங்களாலும் (Intellec tual Element); தாம் கூறலுறும் பொருள்கள் தம்மாட்டு விளைத்த உணர்ச்சிகள் பிறர்க்கும் விளையுமாறு, வெளியிட்டுரைத்தற்கு வேண்டப்படும் உணர்ச்சி நல மேம்பாட்டிலும் (Emotional Element); தாம் கூறப்புகும் பொருள்கள் பிறர் மனத்தின் கண் பசுமரத்தாணிபோலப் பதிந்து இன்புறுத்தும் வண்ணம், உவமை உருவகம் முதலிய சொற்பொருள் அணிகளால் அழகு படுத்திக் கேட்பார்ப் பிணிக்கும் தகையவாய் நன்றினிது விளக்கவல்ல கற்பனை வளங்களாலும் (Imaginative Element), தம்மாற் கூறப்படும் பொருள்களை, "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்தல் வேண்டும்" எனத் தொல்காப்பியனார் கூறுமாறு போல, நன்கினிது ஆராய்ந்து சிக்கறுத்துத் தூய்மை செய்து

அழகொழுக இனிதாய் நிரல்படத் தொடுத்தமைத்து வகுத்துரைக்க வல்ல கலைநலங் கனிந்த நூல் யாப்பு முறைகளாலும் (**Technical Element**) அமைவனவாகின்றன. இவ்வகையாற் கருதலுறினும், திருவாசகத்தின் இலக்கியத்தின் மலையிலக்கென விளங்கா நிற்கின்றது. தாலிபுலாக நயம் பற்றி அதற்கொரு சிறுசான்றினை ஈண்டுக் காண்போம்.

“அண்டத் தரும் பெறல் மேகன்”

இறைவன் தமக்குச் சிவானந்தானுபவமாகிய பேரின்ப மாரியினை வரையா வண்மையிற் கைம்மாறு கருதாது தனது பேரருளாற் பெரிதும் பொழிந்தனனாகலின், அவனை “அண்டத் தரும் பெறல் மேகன்” என வியந்து மகிழ்ந்துரைக்க விரும்பிய அடிகள் அக் கருத்தினைத் தமது நுண்மாண் நுழைபுலம் தோன்றவும் உணர்ச்சிநலமேம்படும் கற்பனை வளங்களும் ஏனைப்பிற நலங்களும் இனிதமைந்து விளங்கவும்; “பரமானந்தப் பழங்கடல் அதுவே—கருமா முகில் தோன்றி—திருவார் பெருந்துறை வரையில் ஏறித்—திருத்தகு மின்னொளி திசை திசை விரிய—ஐம்புலப் பந்தனை வாளரவு இரிய—வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப—நீடெழில் தோன்றி வாளொளி மிளிர—எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து—முரசெறிந்து மாப் பெருங் கருணையின் முழங்கிப்—பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட—எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்—செஞ்சுடர் வெள்ளம் திசை திசை தெவிட்ட—வரையுற—கேதக் குட்டம் கையற ஓங்கி—இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை—நீர் நசை தரவரும் நெடுங்கண்மான் கணம்—தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்—அவப் பெருந் தாபம் நீங்காது அசைந்தன—ஆயிடை வானப் பேரியாற்று அகவயிற்—பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்—சுழித்தெம் பந்தமாக்கரை பொருது அலைத்திடித்து—ஊழூழ் ஓங்கிய நங்கள்—இருவினை மாமரம் வேர் பறித்தெழுந்து—உருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்—சந்தின் வான் சிறை கட்டி மட்டவிழ்—வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்—மாப்புக் கரைசேர் வண்டுடைக் குளத்தின் மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி—அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத்—தொண்ட உழவர் ஆரத்தந்த—அண்டத் தரும் பெறல் மேகன் வாழ்க!” என நீண்டதோர் அழகிய உருவகப் பகுதியினை அருளிச் செய்திருத்தல், திருவாசகத்தின் சிறந்த இலக்கியத் திறனை உணர்த்துதற்குப் போதிய சான்றாகும். இனியதொரு நீண்ட முற்றியைபுருவகம் அமைந்த சிறந்த இலக்கிய நலம் செறிந்த கவிதைப்பகுதி ஒன்றினை, சங்க நூல்களிலும் காண்டல் அரிதாகும் என்றல் மிகுத்துரையன்று.

பொருள் விளக்கம்:

மிக மேலான இன்பப் பழங்கடலாக விளங்கும் சிவமானது, கரிய பெரிய முகில் போலத் தோன்றி, திருப்பெருந்துறை என்னும் மலையின் மீது ஏறி, விந்து தத்துவமாகிய மின்னல் ஒளியினை எல்லாத்திசைகளிலும் பரவுமாறு செய்து, ஐம்புல அவாக்களாகிய பாம்புகள் இரியவும், உலகியற் றுன்பங்களாகிய கோடை வெம்மை ஒழியவும், அருள் மழையினைப் பொழிந்தது! அதுபோது நாத தத்துவமாகிய பறையை அறைந்தாற்போல, அஃது இடிமுழக்கம் செய்தது! அங்ஙனம் மின்னியும் இடித்தும் மழை பொழிந்த நிலையில், இந்திரகோபப் பூச்சிகள் உயிர்களின் அளவில்லாத பிறவிகளைப் போல மிகுத்துக் காணப்பட்டன! கார்காலத்திற் குரிய தோன்றிப் பூக்கள் மலர்வது போல அச் சிவத்தின் “அஞ்சேல்” என்ற திருக்கை விளங்கியது! காந்தட் பூக்களைப் போல அடியார்களின் கூப்பிய கைகள் திகழ்ந்தன! அருள் வெள்ளம் இன்பச் சுழல்களைச் சுழலவிட்டுக் கொண்டு பெருக்கெடுத்து ஓடுகின்றது! இவ்வருள் வெள்ளத்தின் நீரைத் தலைப்பட்டுப் பருகுதற்குத் தவப்பேறு வாயாத உயிர்களாகிய மான் கூட்டங்கள், பிறவித் துன்பமாகிய நீர்விடாயினை மேற்கொண்டு, அறுவகைப் பொய்ச் சமயங்களாகிய கானல் நீரினை உண்மை நீர் என்று மயங்கி அலைந்து திரிந்து வருந்துகின்றன! இந்நிலையில் அருள் வெள்ளமானது பெருகுதலால், மலப் பிணிப்பாகிய பந்தம் என்னும் ஆற்றின் கரைகள் இடிந்து சிதைந்து அழிகின்றன! இருவினைகளாகிய மாமரங்கள் வேரோடு பறித்து வீழ்த்தப்படுகின்றன! இவ்வருள் வெள்ளத்தினை அடியார்கள் தங்கள் உள்ளமாகிய குளங்களில் நிரப்பிக் கொள்கின்றனர்! அங்ஙனம் நிரப்பிக் கொண்ட அடியார்களாகிய உழவர்கள், வழிபாடு என்னும் வயலின்கண், அன்பு என்னும் விதையினை விதைத்து

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# தில்லை முதல் குடந்தை வரை.

(முன் தொடர்ச்சி)

ஞானம் என்னும் வெளி எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டு எல்லாவற்றினுள்ளும் ஊடுருவிக் கொண்டு இருக்கின்றது. அதனால்தான் அது தூலமான அம்பலம் எனப்படாமல் நுணுக்கமான சிற்றம்பலம் எனப்படுகின்றது.

ஆண்டவன் அசைவு—நடனம்; அருள் வெளியில்—அறிவு வெளியில் அதாவது சிதாகாசத்தில்—ஞான நட்பத்தில்; அறிவு வெளி என்றால் வெறும் அறிவு வெளியல்ல. குணத்தோடு கூடிய ஞானவெளி. அவன் நடனத்தை அங்கேதான் காணவேண்டும்; காணமுடியும்.

அன்புணர்ச்சியில் மேம்பட்டுத் தாமச, இராசத எண்ணங்கள் போய் சர்த்துவிக குணத்தில் உயர்ந்து அருளையன்றி வேறெதனையும் எண்ணாத நிலையில் அந்த உணர்ச்சியோடு ஆண்டவன் திருநடனத்தைக் காண்பதற்குத் தகுதிபெறவே இங்கே வந்திருக்கின்றோம்.

நல்ல அறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், பல்வேறு தரத்தினர் எல்லோரும் ஒன்றுபட்டு அருளைக் கடைப்பிடித்து உயர வேண்டும் என்று நம் உடன் வந்திருக்கின்றனர்.

குருகுலம் பாடல் பெற்ற தலங்களை நடுஇடமாகக் கொண்டு உலகப்பணி செய்ய விழைவது. அருள் பெறப் பெற உலகியல் தொண்டைத் திருத்தமாய், உண்மையாய், ஆற்றலாய்ச் செய்ய முடியும் என்பது எங்கள் நம்பிக்கை. 63 நாயன்மார்களும் அப்படித்தான் வாழ்க்கை நடத்தினார்கள். திருவீழிமிழலைக்கு வந்த அப்பரும், சம்பந்தரும் அங்கே காணப்பட்ட பஞ்சத்தைப் போக்கவேண்டுவது தம் கடன் என எண்ணி அங்கேயே தங்கி அனைவருக்கும் சோறும் கூறையும் வழங்கிப் பஞ்சம் தீர்ந்த பின்னரே சென்றிருக்கின்றனர்.

அருளில் ஒருமையுற்றிருக்கிற போது அப்படியே இருப்போம். புலன்களில் நினைப்பு போகிற போது தொண்டு செய்வோம்.

நாயன்மார்கள் உயர்ந்த அருள் நிலையில் விளங்கி உலகப் பணியும் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்களைப் பின்பற்றி நாங்களும் நேரமும் வாய்ப்பும் நேர்ந்தால் எங்கெங்கு வாழ்க்கைச் சீர்திருத்தங்களுக்கு என்ன என்ன வேண்டுமோ அவைகளைக் குருட்டுத்தனமாய் அல்லாமல் அறிவான முறையில் இம்மைக்கும் எம்மைக்கும் ஆன நிலையில் செய்வோம்.

ஆற்றலுள்ள இடங்கள் நல்லவர்களைக் கவர்ந்து பாடச் செய்திருக்கின்றன. தலங்களின் சக்தி முதன்மை. நால்வர் பாடல்களால் அச்சக்தி இன்னும் மிகுதியுற்றிருக்கின்றது. ஆகவே, கோயிலை மட்டுமன்றிப் பாடல் பெற்ற ஊரையும் அவ்விடத்து மண்ணையும் நாம் போற்ற வேண்டியிருக்கிறது. மண் அந்த ஊருக்கு ஆற்றல் தருகிறது.

திருமுறைப் பாடல்கள் தெய்வப் பாடல்கள்; அருட்பாடல்கள்; அவைகள் மக்களின் எளிய அறிவாராய்ச்சி நிலையில் இருந்து பாடப்பட்டவை அல்ல. அருள் வெளியில் இறையாற்றலில் இருந்து பாடப்பட்டவை. படித்து ஆராய்வதற்கு [illegible] படிப் பாடித் திளைத்துப் பரிபக்குவமுற்று உயரவே வந்தவை. தம்மைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவாரை நன்னெறிக்கு உய்த்து வாழவைப்பவை.

இசை வளம், இலக்கிய நயம், கனிவு நலம் எல்லாம் நிரம்பிய தேவார திருவாசகங்கள் மறந்தும் முதல்வனையன்றி வேறொருவரைப் பாடாதவை. அவைகள் தோன்றக் காரணமாக இருந்த இடங்களை, திருவூர்களைப் பார்ப்பது எவ்வளவு நல்லது. தேவாரம் பாடல் பெற்ற இடங்களையும் அவற்றை ஓதும் அடியார்களையும் சிறந்த முறையில் வைத்திருக்கவேண்டும். அதனால் நமக்கு எல்லா நலனும் உண்டாகும்.


**Phone 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

**சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்**

**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை].

## திருவேட்களத்திலே! (4-6.54)

நுழைவு:

இப்போது அண்ணாமலை நகர் என வழங்கும் பகுதியே சமயகுரவர் நாளில் திருவேட்கள நன்னகராக இருந்தது. தில்லைக்குக் கிழக்கே இரண்டுகல் தொலைவில் உள்ள இப்பதிக்குக் குருகுலத்தார் 4-6-54 அன்று காலை 5 மணிக்கெல்லாம் புறப்பட்டனர். விடியற் காலையில் தில்லை நகரின் இனிய காட்சியையும், அம்பலக் கூத்தனின் செம்பொற் கோயிலிலிருந்து பரவிய திருமுறைப் பாடல் இசையினையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்து கொண்டே, அங்குள்ள கலைத் தெய்வத்தின் திரு முன்னிலையில் தங்கிச் சிறந்து வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அழகிய நகருக்குள்ளே புகுந்தனர். அவ்விடத்து அமைதியும், அழகும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. 'திருவேட்கள நன்னகர்' எனத் தேவாரத்தில் குறிக்கப் பெறும் அவ்விடம் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் அவ்வாக்குப் பொய்க்காதபடி அரிய கலைச்சமூக நகராக மலர்ந்திருக்கும் நிலையைக் கண்டு பெருமிதமுற்றனர். தமிழகத்தின் தனிப் பல்கலைக் கழகமாகத் திகழும் அவ்விடம் தில்லைப் பரமன் திருமுன்னிலையில் இருப்பதோடு, திருவேட்கள நாதரையும் தன்னுட்கொண்டிருப்பதை நினைந்து மகிழ்ந்தனர். இந்நிலைகளை அங்கே அருங்கலை பயிலும் நம்பியரும் நங்கையரும் நன்குணர்ந்து அவர் தம் கலை நிலைகளை அருளடிப்படையில் அமைத்துக்கொண்டு சிறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். என்று எண்ணிப்பார்த்து வக்கமும் இரும்பூதும் எய்தினர் பின் தம் நினைவு அலைகளில் அங்குள்ளவர்களை எல்லாம் மூழ்க வைப்பதுபோல் அங்குள்ள திருக்குளத்து நன்னீரை அலைத்து அதில் மூழ்கித் தம்மைப் புனிதப் படுத்திக்கொண்டு திருக்கோயிலை அடைந்தனர்.

சிறப்பு:

திருநீல கண்டர் வாழ்ந்தது இத் தலத்தில்தான். இங்குள்ள திருக்கோயில் அளவாகவும் அழகாகவும் புதிதே போலவும் இருக்கின்றது. இவ்விடத்தில் குருகுலத்தார் வழிபாட்டுக்கும் காலைச் சிற்றுண்டிக்கும் உயர்திரு. T K முத்துகிருஷ்ண பிள்ளை அவர்கள (சிதம்பரம், ஸ்ரீ நடராஜா படக்கடை உரிமையாளர்) தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

நுண்மை:

காலைப் பொழுதில் அவ்விடத்து வழிபாடு இனிதே முடிந்தது. திருவேட்களத்துத் திருப்பதிகங்கள் ஓதப் பெற்றன. அவற்றை ஒட்டி ஆசிரியர் அவ்விடத்து நாதரின் அருளையும் அகனல் விளங்கும் அண்ணாமலை நகரைப் பற்றியும் அங்குள்ள பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி பற்றியும் சிறிது நேரம் பேசித் தேனித்தார். முன் ஏற்பாட்டின் படி பிடுகி ஒன்றில் அனைவரும் சிற்றுண்டி கொண்டு எல்லோரும் அடுத்துள்ள திருநெல்வாயிலுக்கு விரைந்தனர்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

## பேட்டைத் தொண்டுகள் குருகுலத்தார் கடமைகள்

சென்னையில் குருகுலச் சார்பில் பேட்டை தோறும் சனிக்கிழமைகளில் வழிபாடும் தொண்டும் நடைபெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கில் மக்கள் அவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். அவைகள் மேல் மேல் விரிவாகவும், பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈடுபாடு கொள்ளுகின்ற வகையிலும் நடைபெற வேண்டும். அதற்குப் பொதுவாகக் குருகுலத்தாரனைவருடையவும், சிறப்பாக அவ்வப் பேட்டைகளிலுள்ள குருகுலத்தாருடையவும் ஒத்துழைப்பும், முயற்சிகளும் வேருவாக வேண்டியிருக்கின்றன.

ஆசிரியர் அவ்வப் பேட்டைகளிலும் சில நாட்கள் தங்கி அங்குள்ள குருகுலத்தாரோடும், மற்றுமுள்ள பலதிற அன்பர்களோடும் குறிப்பாகத் தமிழிளைஞர்களோடும் பெருமக்களோடும் அளவளாவி அவரவர்கள் விரும்பும் நிலைகளில் தெளிவு நல்க இசைந்திருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது. இவ்வகையில் அவர்கள் வருகையை அவ்வப் பேட்டையினரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு ஆங்காங்குள்ள குருகுலத்தார் தக்க இடம் முதலியன அமைத்துக் கொடுத்து நல்ல அடிப்படை கோலிக் கொடுக்கவேண்டும்.

பேட்டைகளிலுள்ள பெருமக்களை எல்லாம் அழைப்பிதழ் கொடுத்து நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். அறிக்கைகளையும், சுவரொட்டிகளையும் பரப்பிக் கூட்டத்தைத் திரட்டவேண்டும்.

ஆசிரியர் வரும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவ்வப்

பேட்டையினரும் தமக்குள் ஓர் இணைப்பை உண்டாக்கிக் கொண்டு அடிக்கடி குருகுலச் சார்பில் அங்கங்கே ஏதேனும் நிகழ்ச்சிகள் நடைபெறுமாறு செய்துகொள்ள வேண்டும். அவற்றில் குருகுலமாணவர்களும் அன்பர்களுமே திரண்டு தமக்கு விருப்பமான துறைகளில் குருகுலச் சார்பில் அங்கங்கே உள்ள அமைப்புகளோடு தொடர்பு கொண்டு ஆக்கவுரைகளும் (பிரசாரம்) கிளர்ச்சிகளும் செய்து வரலாம். ஆசிரியரையும் தக்கபடி வருவித்து அவற்றில் பங்கு கொள்ளச் செய்யலாம்.

பலரையும் குருகுலத்திற் சேர்க்கவும், முல்லைக் கொடிக்கு ஆண்டுக் கையொப்பதாரராகவும், வாழ்நாள் உறுப்பினராகச் சேர்க்கவும், குருகுலத்தின் திருக்குறள் அதிகாரங்களைச் செயற்படுத்தக் கூடியவர்களைக் காணவும் முயலவேண்டும்.

குருகுலக் கொள்கைப்படி வழிபாட்டைவிட, பேட்டைகளில் செய்யும் தொண்டு முதன்மை; தொண்டு சிறக்கவே வழிபாடு. ஆதலின் பேட்டைகளில் தக்கபடி தொண்டுகள் நடைபெற அன்பர்கள் பெரிதும் முயன்று எண்ணி எண்ணி எவ்வளவோ செய்யலாம்; செய்ய வேண்டும்.

இதுபோல் பேட்டைகளுக்கு ஆசிரியர் வருகிற வாய்ப்பு அடிக்கடி வாய்க்க ஏதுவில்லை. ஆகவே, வாய்த்த வாய்ப்பை அன்பர்கள் நழுவவிடக் கூடாது என்று மிகவும் வற்புறுத்தி நினைப்பூட்ட விழைகின்றேன்.

இங்ஙனம்: பணிவுள்ள,
—ந. ரா. ஆடலரசு.
குருகுலச் செய்தியாளன்.

# நாவுக்கரசரும்-நாமும்

'மூர்த்தி'

'அன்பு கனிந்த மனத்தொடு கண்களின் வழியே நீர் பெருக இறைவனைப் போற்றுபவரே தலையாய மக்கள்' எனத் திருநாவுக்கரசர் திருப்பூவணூர்ப் பதிகத்தில் தலையாய மனிதரின் தன்மையை விளக்கிக் கூறுகின்றார். மேலும், 'மானுடப் பிறவி தானும்வகுத்தது மனவாக்காயம் ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காகவன்றோ' என்று அழுத்தமாகக் கூறுகிறது சிவஞான சித்தியார். எனவே மானுடப் பிறவி அரன்பணிக்காகவே அமைந்ததெனவும், அப் பிறவியில் செல்வன் கழலேத்தும் செல்வத்தைப் பெற்றவரே சிறந்தோர் என்றும் ஏனைச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மற்றோர் தாழ்ந்தோரே என்பதும் நன்கு புலனாகின்றது.

நாவுக்கரசர் தாம் காணும் பல்வேறு கூட்டத்தினரைப் பார்த்து அவர்களைத் தலையாய மனிதராக்க முயல்கின்றார். அவர் சந்தித்த மக்கள் எத்தன்மையோர். அவர் ஆங்காங்கு அழைக்கும் முறைகளினூடே அவற்றை அறியலாம். உலகப் பொருள்களிடத்தில் இச்சை வைத்து மயங்கும் மக்களை 'மாலதாகி மயங்கும் மனிதர்காள்!' என்றும் அம் மயக்கத்தின் காரணமாக இந்த மங்கும் ஓடித் திரிபவர்களைக் கண்டு அறிவில்லாதவர்களே உண்மை கூறுவேன் இருந்து கேளுங்கள் எனக் கனிந்த உள்ளத்தோடு 'இருந்து சொல்வன் கேண்மின்கள் ஏழைகாள்!' எனவும், செவி இருந்தும் கேட்க வேண்டுவனவற்றைக் கேளாமல், கேட்குந் திறனில்லாமல் கேட்கும் செவிடராய்த் திரிந்து பயனின்றுழைக்கும் வேறொரு கூட்டத்தினரைக் கண்டு 'துளையிலாச் செவித் தொண்டர்காள்!' என்றும் அழைக்கின்றார்.

இங்கு, துளை என்பது காதின் வெளித் துளை அல்ல. ஆன்றமைந்த பெரியோர் கூறும் திருவருள் கலந்தொலிக்கும் உண்மைப் பொருள்களைக் கேட்டலினால் உண்டாம் நுண்மைத் துளையாம். எனவே தான் வள்ளுவப் பெருந்தகையும் 'கேள்வியால் தோட்கப்படாத செவி' என்றார். இது குறித்தே அடிகள் திருவங்கமாலையில் 'செவிகாள் கேண்மின்களோ சிவனெம் மிறை செம்பவள எரி போல் மேனிப்பிரான் திறம், எப்போதும் செவிகாள் கேண்மின்களோ' என்றருளினர். நாவிருந்தும் இறைவனின் நலந்தரு நாமத்தை வழுத்தாமல் ஊமையர்களாக ஓடியாடி வருந்தி உழலும் மக்களைப் பார்த்து 'ஓடி எய்த்தும் பயனில்லை ஊமர்காள்!' என்றழைத்தும், அடிகளின் அறவுரைகளைக் கேட்க விரும்பாமல் எட்டி நின்று பார்க்கும் கூட்டத்தினரைப் பார்த்து 'வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்!' என்றும் இடித்துரைக்கின்றார். அறவுரைகளால் நலம் பல எய்தி அடியார்களாகச் சேர்ந்து தம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றவர்களையும் நோக்கி 'நாடி நந்தம ராயின தொண்டர்காள்!' என மேலும் அவர்கள் உய்யுமாறு உணர்த்துகின்றார். ஏன்? மக்கள் இறையுணர்வு கொண்டு இன்ப வாழ்வு வாழ வேண்டுமென்பதற்கேயாம்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், [illegible]மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)